

தலைமைச் செயலகத்தில் நேற்று (19.1.2026) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, 2026 ஆம் ஆண்டுக்கான முதல் சட்டமன்ற கூட்டத் தொடர், 20.01.2026 அன்று தமிழ்நாடு ஆளுநர் உரையுடன் தொடங்கவுள்ளதை முன்னிட்டு, சட்டமன்ற பேரவையில் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்தார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (19.01.2026) சென்னை, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக கூட்டரங்கில், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் பேறுசார் குழந்தைகள் நலத் திட்ட (RCH) பகுதி நேர தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பூதியம் ரூ.1,500 லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.7,376 ஆக உயர்த்தி அதற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார் மற்றும் துறைசார் அலுவலர்கள், பேறுசார் குழந்தைகள் நலத்திட்ட பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பிப்ரவரி 8–ஆம் தேதி படப்பை கரசங்காலில் கோலாகலமாக

# சென்னை - விழுப்புரம் மண்டல பி.எல்.ஏ.-2, பி.எல்.சி. சந்திப்பு மாநாடு! 1 ½ லட்சம் பேர் பங்கேற்கும் வகையில் பிரம்மாண்ட ஏற்பாடு!

## காஞ்சி வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு – மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

*காஞ்சிபுரம், ஜன. 20-*

பிப்ரவரி 8-ஆம் தேதி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், படப்பை கரசங்காலில் கோலாகலமாக நடைபெற உள்ள சென்னை - விழுப்புரம் மண்டல BLA-2, BLC சந்திப்பு மாநாட்டில் 1 ½ லட்சம் கழகத்தினர் பங்கேற்கும் வகையில் பிரம்மாண்டமான ஏற்பாடுகள் செய்யப்படுவது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திலிருந்து 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட BLA-2, BLC பங்கேற்க செய்வது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் தி.மு.கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் குரோம்பேட்டை ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்துள்ள ஆனந்தா திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ. கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ. தமிழ்மணி, எல்.இதயவர்மன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பத்மா பிரியா, கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ரஃபி அகம்மது, பரிதி இளம்சுருதி, எஸ்.எம். கே.அண்ணாதுரை, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ. மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், க.அன்புச்செல்வன், ஜி.சி. அன்புச்செழியன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயகுமார், எஸ்.இந்திரன், டி.காமராஜ், பெருங்களத்தூர் சேகர், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றிய செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஜி.கே. ரவி, அப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி. ராஜன், நகரச் செயலாளர்கள் டி.பாபு, ஜெ.சண்முகம், எஸ்.ஜபருல்லா, கோ.சக்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி, கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் கிருத்திகா தேவி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்பிராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், கே.எத்திராஜ், க. தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மா.கணேஷ்பாபு, இரா. பாஸ்கரன், கே.அருள்தேவி, மு.ரஞ்சன், செல்வகுமார், ஜிஜேந்திரன் ராமு, கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், டி.கே. கமலக்கண்ணன், கே. மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, எஸ்.ஆல்பர்ட், ஜா. செந்தில்தேவராஜ், பா.ஞானபிரகாசம், சசிகலா, டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர். கோவிந்தன், வி. ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி. எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டம், தங்கம் வாட்ஸ், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகி கள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

**தீர்மானம் 1:–**

நம்மையெல்லாம் அன்பால் வழி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் பாசமிகு அன்புத் தலைவர் தளபதி அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று, வருகிற பிப்ரவரி 8-ஆம் தேதி ஞாயிற்றுகிழமை அன்று மாலை நம்முடைய மாவட்டத்தில் உள்ள படப்பை-கரசங்காலில் உள்ள மாபெரும் திடலில்,

சென்னை - விழுப்புரம் மண்டல BLA-2 - வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் மற்றும் BLC- வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் 1,50,000 பேர் சந்திப்பை, பார்ப்போர் வியக்கும் வகையில் மிகவும் பிரம்மாண்டமான வகையில் மேடை அமைத்து மாநாடு போல் நடத்திடுவது என்றும்,

இம்மாபெரும் மாநாட்டில் நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய 25,000-க்கும் மேற்பட்ட BLA-2 - வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் மற்றும் BLC- வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பங்கேற்கச் செய்து இம்மாநாட்டை வெற்றி மாநாடாக நடத்துவது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு. கழகம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

**தீர்மானம் 2:–**

நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் - முதல்வர் அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று, ஒவ்வொரு வாக்குச்சாவடி வாரியாக, மகளிர் பூத் கமிட்டியில் இடம் பெற்றுள்ள 10 மகளிர், பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் 1 மாதகாலம் மாவட்டம் முழுவதும் வீடு - வீடாகச் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகள் பற்றிய துண்டறிக்கையை வழங்கி தேர்தல களப் பணியில் ஈடுபடுவது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணி மற்றும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க சார்பில் அதன் மாநில தலைவர் ரெ.தங்கம் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் 200க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நல உதவிகள் மற்றும் பொங்கல் தொகுப்பினை வழங்கினர்.உடன் தாயகம் கவி எம்எல்ஏ,அண்ணா அறிவாலயம் மேலாளர் ஆர்.பத்மநாபன், பி.டி.சி.ஜி. செல்வராஜ் மும்பை ஜேசுராஜ், திருக்குவளை டாக்டர் என். அம்பாள்குமார், க.இளங்கோவன்,பா. சக்திவேல், வீர. சரவணன், க.எழிலன்,இரா. கோவிந்தராஜ், வழக்கறிஞர் எஸ்.உமாதேவி, நியமன கவுன்சிலர் ஜான்சி உமா, பா.சந்தானகிருஷ்ணன், எச்.சரஸ்வதி,கி. பத்மநாபன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

# கால நிலைக் கல்வி மற்றும் குளுமைப் பள்ளிகள் திட்டம்!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தனர்!



*சென்னை, ஜன.20*

நிதி, சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (19.01.2026) சென்னை, தலைமைச் செயலகத்தில் காலநிலைக் கல்வி மற்றும் குளுமைப் பள்ளிகள் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் வாயிலாக காலநிலை மாற்றச் சவால்களை எதிர்கொள்ள பல்வேறு தடுப்பு மற்றும் தகவமைப்பு நடவடிக்கைளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, தமிழ்நாடு போன்ற நீண்ட நெடிய கடற்கரையினைக் கொண்ட மாநிலத்தில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் வழக்கமாகி வருகின்ற சூழலில், இச்சவால்களை எதிர்கொள்ளத் தேவையான விழிப்புணர்வு மற்றும் கல்வியறிவினை அனைவருக்கும் ஏற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து, கடந்த 2025-26-ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு கூட்டத்தொடரின் போது காலநிலைக் கல்வியறிவினை நம் மாநிலத்தின் கல்வி அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் ஒருங்கிணைத்து எடுத்துச்செல்ல காலநிலைக் கல்வியறிவு முன்னெடுப்பு (CLIMATE EDUCATION INITIATIVE) குறித்த அறிவிப்பு நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களால் சட்டப் பேரவையில் அறிவிக்கப் பட்டது.

இம்முன்னெடுப்பின் கீழ் மாணவர்களுக்கு கோடைகால மற்றும் குளிர்கால இயற்கை முகாம்கள், காலநிலை மாற்றம் குறித்து பள்ளி ஆசிரியர்களுக்கான உறைவிடப் பயிற்சி முகாம்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு சூழல் அறிவோம் எனும் தலைப்பிலான விநாடி வினா ஆகியவை பள்ளிக்கல்வித் துறையுடன் இணைந்து சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையால் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, “சூழல் 2.0” விநாடி வினாவின் இறுதிப் போட்டி கடந்த 06.01.2026 அன்று நடைபெற்ற நிலையில், இன்று, சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை கூட்ட அரங்கில், “காலநிலைக் கல்வி” மற்றும் குளுமைப் பள்ளிகள் முன்னெடுப்பு களின் துவக்கவிழா நடைபெற்றது.

அப்போது பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, காலநிலைக் கல்வியறிவு பாடத்தொகுதிகளை வெளியிட்டு, காலநிலைக்கல்விதிட்டத்தினைத் துவங்கி வைத்தார்.

அதேபோல், காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய சுற்றுப்புற வெப்ப அதிகரிப்பின் காரணமாக நகர்புற வெப்பத்தீவு விளைவு கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கங்கள் மாணவர்கள் மீதும் அவர்கள் கற்றல் திறனிலும் எதிரொலிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கும் நிலையில், பள்ளி வகுப்பறைகளிம் மாணவர்களுக்கு இதமான கற்றல் சூழலை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் 2025-26ம் ஆண்டிற்கான செயல்திட்டத்தில் குளிர்கூரை முன்னெடுப்பு சேர்க்கப்பட்டு, அம்பத்தூர் பெருந்தலைவர் காமராஜர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அதன் விளைவாக வகுப்பறைகளின் வெப்பநிலை 1.5 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை குறைந்தது தெரிய வந்தது. இதனை மேற்கோள் காட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த மாதம் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழுவின் மூன்றாவது கூட்டத்தில், இத்திட்டம், தமிழ்நாட்டின் அனைத்து பசுமைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் (UNEP) உருவாக்கப்பட்ட பசுமையான எதிர்காலத்திற்கு குளுமையான வகுப்பறைகள் மற்றும் பசுமைப் பள்ளிகளில் அமைவான குளிரூட்ட உத்திகளை ஒருங்கிணைத்தல் ஆகிய புத்தகங்களை வெளியிட்டு, செனாய் நகரிலுள்ள சென்னைப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், திருவான்மியூர் சென்னை மேல்நிலைப் பள்ளியிலும் குளுமைப் பள்ளிகள் திட்டத்தினை துவங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹ்யூமன் செட்டில்மெண்ட்ஸ் நிறுவனத்தின் பசுமைப் பள்ளிகள் தாக்க அறிக்கையினை வெளியிட்டு, சென்னை, அம்பத்தூர் பெருந்தலைவர் காமராஜர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கொல்லுமேடு அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு பசுமைப் பள்ளிகளுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை திருமதி சுப்ரியா சாஹூ, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, முனைவர். பி. சந்திரமோகன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான சிறப்புச் செயலாளர் அனுராக் மிஸ்ரா, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய தலைவர் முனைவர் எம்.ஜெயந்தி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர், ஆ.ர.ராகுல் நாத், மாநில திட்ட இயக்குநர், சமக்ர சிக்ஷ அபியான், மரு. எம்.ஆர்த்தி, இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, முனைவர் எஸ்.கண்ணப்பன், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் உதவித் திட்ட இயக்குநர், கிரிஷ் பால்வே, உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எம்.சரவணகுமார், இயக்குநர், மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (SCERT), திருமதி என்.லதா, இணை இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, திருமதி. எஸ். சாந்தி, துணை இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, திருமதி.காமாட்சி, இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹ்யூமன் செட்டில்மெண்ட்ஸ், தலைவர் (உட்கட்டமைப்பு & காலநிலை) அமீர் பசாஜ், மூத்த ஆலோசகர்கள், ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம், துர்கானந்த் பல்சாவர், கே.பி. மணிகண்டன், பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் மற்றூம் அரசு உயர் அலுவலர்கள்ஆகியோர் உடனிருந்தனர்.



காஞ்சிபுரம் மாநகர செயற்குழுக் கூட்டம் மாநகர அவைத் தலைவர் கே.ஏ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றினார். உடன் சிறப்பு விருந்தினராக கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை அவர்கள் கலந்து கொண்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் மாநகர செயலாளர். சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்ட் ஆறுமுகம். மேயர். திருமதி. மகாலட்சுமி யுவராஜ். உள்ளிட்ட பகுதி செயலாளர்கள் மாநகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,